# தவக்காலம் 4ஆம் வாரம் - ஞாயிறு - முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்பிற்குரியவர்களே, தவக்காலம் நான்காம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

இன்றைய நற்செய்தியில், பார்வையற்றவர் பார்வையற்று இருப்பதற்குக் காரணம், “இவர் செய்த பாவமா, இவர் பெற்றோர் செய்த பாவமா” என இயேசுவின் சீடர்கள் கேட்டபோது, கடவுளின் செயல் வெளிப்படும் பொருட்டே இப்படி இருக்கின்றார்” எனக் கூறுகின்றார். நாமும் நமக்கு வரும் துன்பங்கள் நாம் செய்த பாவத்தினாலும், இன்பங்கள் புண்ணியத்தினாலும் என நினைக்கின்றோம். ஆனால், நம் வாழ்வின் நிகழ்வுகள் அனைத்தும் கடவுளின் மாட்சி வெளிப்படவே என்பதுதான் உண்மை. எந்த ஒரு நிகழ்விலும் இறைபிரசன்னததைக் காணும் ஒருவரால் மட்டுமே இறைநம்பிக்கை வரும். பரிசேயர்கள், பார்வையற்றவரிடம், “அவன் உனக்கு என்ன செய்தான்? எப்படிப் பார்வை அளித்தான்?” எனக் கேட்கின்றனர். இயேசு பிறவியிலேயே குருடனாக இருந்த ஒருவரை குணமாக்கியதை பரிசேயர்களால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. நாமும் இன்று யாருக்கும் எந்ந ஒரு நல்லது நடந்தாலும், அடுத்தவர் தம் வாழ்வில் பல நிலைகளில் முன்னேறிச் சென்றாலும் அதை நம்மால் ஏற்றுக் கொள்ள இயலாது. அத்தகைய பரந்த மனம், உயர்ந்நத உள்ளம், இன்று நம்மில் மறைந்து கொண்டே போகின்றது.

பாவத்தில் இருக்கும் மனிதனின் பார்வை தடைபடுகிறது. தீய சிந்நதனை, செயல்பாடுகள் உள்ள மனிதனின் பார்வை மங்கி விடுகின்றது. இதயம் சுருங்கி உண்மையையும், யதார்த்தையும் ஏற்றக் கொள்ளும் அகக்கண் புரையுற்று பார்வையைப் பாதித்து விடுகின்றது. பார்வைக்கும் பாவத்திற்கும் நெருக்கம் அதிகம். புனிதப் பார்வையில் சரியானதைக் காண்போம். அங்கு கடவுளின் மாட்சியைக் காணலாம். உண்மையும், ஒளியும், உயிரும் என்று சொன்ன நம் ஆண்டவர் இயேசுவின் வழியில் வாழ்ந்து, நம் இதயத்திலும், சிந்தனையிலும் தெளிவான பார்வை பெற இறைத்தந்தையின் அருள் வரம் கேட்டு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. "உனது நம்பிக்கை உன்னை குணமாக்கிற்று" என்ற தெய்வமே,

பல்வேறு நோய்களினால் துன்புறும் மாந்தர்களை உம் பாதம் ஒப்புக் கொடுக்கின்றோம். அவர்கள் செய்த பாவங்களை நீர் அன்பு நிறைந்த உள்ளத்தால் மன்னித்து, அவர்களை உம் திருக்கரங்களால், தொட்டு குணப்படுத்தி. அவர்கள் தங்கள் விசுவாசத்தில் இன்னும் வேரூன்றியவர்களாக, உமக்கு என்றும் நன்றியறிந்தவர்களாக, நல்சாட்சிகளாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

2. "மனம் மாறி வாழ்வு பெறுங்கள்" என்றுரைத்த எம் இறைவா,

தொடங்கியுள்ள இத்தவக்காலத்தில், எங்கள் எண்ணங்கள், செயல்கள் அனைத்திலும் வெளிவேடத்தனமில்லாது, உம் ஆசீருக்கும், அருளுக்கும் எங்கள் பாவங்கள் தடைக்கற்களாக இல்லாதவண்ணம், உள்ளத்தின் ஆழத்தில் எங்கள் பாவங்களை உணாந்தவர்களாக, உம்; அன்பிற்கும், இரக்கத்தையும் உணர்ந்தவர்களாக, எங்கள் வாழ்வை புதுப்பித்து, தூயதோர் உள்ளத்தை எங்களுக்குள் பெற்றவர்களாக, வாழ்ந்திட வரம் வேண்டி, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

3. "உனது ஆற்றலாலும் அல்ல, வலிமையாலும் அல்ல, எனது ஆவியாலே ஆகும்" என்றுரைத்த எம் இறைவா,

தங்கள் உடல் நோயினாலும், இன்னும் பல்வேறு சூழ்நிலைகளினாலும் இத்திருப்பலிக்கு வர இயலாத மாந்தர்களை உம்மிடம் அர்ப்பணிக்கின்றோம். அவர்கள் நோய்கள், வேதனைகள், மனப்பாரங்கள் அனைத்தினின்றும் அவர்களை விடுவித்து, உம் நற்கருணை பிரசன்னத்தை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை வாழ்வித்து, அவர்கள் விரைவில் உம் சந்நிதானம் வந்து, திருப்பலியை காணும் பேற்றினை பெற்று, உமக்கு நன்றியறிந்த மக்களாக வாழ்ந்திட வரம் வேண்டி, இறைவா! உமமை மன்றாடுகின்றோம்.

4. “தேவைக்கு மேல் உன்னிடம் உள்ளதையெல்லாம் தருமம் செய்துவிடு” என்றுரைத்த எம் இறைவா,

தங்கள் வாழ்வின் அடிப்படை வாழ்வாதாரங்களைக் கூட கிடைக்கப் பெறாத ஏழை, எளியவர்களை உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். தேவைக்கு மேல் வைத்திருப்போர், தங்கள் வளமான வாழ்வுக்காக, தங்களின் வருங்கால தலைமுறையினருக்காக அவற்றை சுயநலனுடன் சொந்தமாக்கிக் கொள்ளாது, ஏழைகளின் வறுமை நிலையை உணரும் கனிவுள்ள இதயமுள்ளவர்களாக, தங்களிடமுள்ளதை பகிர்ந்து, தருமங்கள் செய்பவர்களாக வாழ்ந்திட வரம் வேண்டி, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com